# சுற்றுலா விடுதிகள் / ஆடம்பர வீடுகள் பதிவு

## சுற்றுலா விடுதிகள் /ஆடம்பர வீடுகள் /சுற்றுலா பயணிகளுக்கான வாடகை வீடுகள் மற்றும் வாடகை வீட்டுப் பிரிவு உரிமையாளர்களுக்குரிய பொறுப்புகள்

1. சுற்றுலா விடுதிகள்.·.ஆடம்பர வீடுகள் .·.சுற்றுலா பயணிகளுக்கான வாடகை வீடுகள் மற்றும் வாடகை வீட்டுப்பிரிவினையுடைய சகல உரிமையாளர்களும் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்திருக்க வேண்டியதுடன் குறித்த தகுதிநிலைகளுக்கு ஏற்ப வீடுகளைப் பராமரித்திட வேண்டியது அவசியம்.

2. இலங்கை சுற்றுலா சபை நியமிக்கப்பட்டடுள்ளதன்படி வீட்டுப்பிரிவு உரிமையாளர்களினால் எப்பொழுதும் குறித்த இடத்தினுள்ளே சுத்தம், சுகாதாரம் மற்றும் உணவுகளின் தரத்தினைப் பேணவேண்டியது அவசியம்.

3. ஆரோக்கியத்திற்கு தீங்கை விளைவிக்கும் நிலைகள், துர்நடத்தைகள், ஒழுக்கமற்ற நடவடிக்கைகள் அல்லது குறித்த தரத்திற்கு ஏற்ப வடுகளைப் பராமரித்திட முடியாத வறிய நிலை போன்ற ஏதாவதொரு வீட்டு உரிமையாளருக்கு ஏற்படுமாயின் அதனை மாற்றியமைப்பதற்கான வாய்ப்பு மற்றும் காலவரையறை வழங்கப்படுவதோடு, அதில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாதவிடத்து இலங்கை சுற்றுலாத்துறை சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களால் வீட்டு உரிமை பதிவு தடை செய்யப்படும்.

4. வேண்டிய தருணங்களில் சுற்றுலா பயணிகளுக்கு பரிசோதனை செய்து பார்ப்பதற்கு வசதியளிக்கும் உரிமையாளர்கள் அவர்களது வீட்டு அறைகளது வசதிகள் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய தரவொன்றினை (Guest Register) செயற்படுத்த வேண்டும். அதன் படிமுறைகள் தற்பொழுது ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளை கொண்டு நடாத்தும் படிமுறைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

5. சுற்றுலா பயணிகளுக்கு வழங்கும் படிவப் புத்தகத்தில் உரிய முத்திரையிடப்பட்டு இருக்க வேண்டும்.

6. சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டுபவர்கள் தமது வீட்டு பிரிவு உரிமைப் பதிவு பத்திரத்தின் சான்றிதழை காட்சிபடுத்த வேண்டியதுடன், இலங்கை சுற்றுலா சபையினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுலா விடுதிக்கான முத்திரையையும் காட்சிப்படுத்த வேண்டும்.

## சுற்றுலா விடுதிகள் / ஆடம்பர வீடுகள் /சுற்றுலா பயணிகளுக்கான வாடகை வீடுகள் மற்றும் வாடகை வீட்டுப் பிரிவு உரிமையாளர்களின் பதிவிற்கு வேண்டிய தகைமையை தீர்மானிக்கும் முக்கிய காரணிகள்

சுற்றுலா விடுதிகள் /ஆடம்பர வீடுகள் /சுற்றுலா பயணிகளுக்கான வாடகை வீடுகள் மற்றும் வாடகை வீட்டுப் பிரிவு உரிமையாளர்களின் பதிவிற்கு வேண்டிய தகைமையைப் பெற்றுக்கொள்ள பின்வரும் காரணிகள் மிக முக்கியம்.

1. அமைப்பு

குறித்த பிரதேசம் மற்றும் வீட்டுப் பிரிவுகளை கொண்டு நடாத்துவதற்கான தகுதி.

2. நுழைவு வீதி

வீட்டுப் பிரிவிற்கு பிரவேசிப்பதற்கு முறையான பாதை அமைந்திருத்தல் வேண்டும்.

3. வீடு

குறித்த வீடானது சுற்றுலா விடுதிகள் ∴ஆடம்பர வீடுகள் ∴சுற்றுலா பயணிகளுக்கான வாடகை வீடுகள் மற்றும் வாடகை வீட்டுப் பிரிவாக நடாத்திச் செல்வதற்கான உரிய வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

4. வீட்டுத்தோட்டம் / பூங்கா

வீட்டுப் பிரிவிற்கு ஏற்ப பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் பராமரித்திட வேண்டும்.

5. பராமரிப்பு

சுற்றுலா விடுதிகள் /ஆடம்பர வீடுகள் /சுற்றுலா பயணிகளுக்கான வாடகை வீடுகள் மற்றும் வாடகை வீட்டுப் பிரிவு போன்ற வகையறாக்களில் (உள் மற்றும் வெளியே) தளபாடங்கள்/உபகரணங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு, தரம் என்பன மேற்கூறிய எவ்வித வீடமைப்பிற்கும் ஏற்ற வகையில் இருக்க வேண்டும்.

6. வாகன தரிப்பிட வசதி

வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான போதிய இடவசதிகள் மற்றும் பூரண பாதுகாப்பு வசதிகள் இருக்க வேண்டும்.

## சுற்றுலா விடுதிகள் /ஆடம்பர வீடுகள் /சுற்றுலா பயணிகளுக்கான வாடகை வீடுகள் மற்றும் வாடகை வீட்டுப் பிரிவுகளுக்கான வழிகாட்டல் படிமுறை

**1. பிரதான அறை**

- பிரதான அறை சுத்தமாக, இடவசதியுள்ள, முறையாக கொண்டு நடாத்தும் இடமாக இருக்க வேண்டும்.
- பிரதான அறையில் இயற்கை காற்று அல்லது வளி இருக்க வேண்டியதுடன் தேவையானளவு இயற்கை அல்லது செயற்கை முறையிலான ஒளி இருக்க வேண்டும்.
- பிரதான அறையில் போதிய அளவு இடவசதி இருக்க வேண்டியதுடன் அதில் உபயோகப்படுத்தப்படுத்தக்கூடிய தளபாடங்கள் இருக்க வேண்டும்.

**2. படுக்கை அறை**

- **சகல படுக்கையறைகளுக்கும் 30 சதுர அடிகளைக் கொண்ட நிலப்பிரதேசத்துடன் குளியலறை, குழாய் வசதிகள் மற்றும் கழிவறை வசதிகள் சுத்தமாக இருக்க வேண்டும்.**

- குளியலறைகள் சுத்தமாக, வழுக்கிச் செல்லாத தன்மையில், நீரினை உறிஞ்சிக் கொள்ளாத மூலப்பொருட்களால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- குளியலறைகளில் தரையிலிருந்து 5 அடி உயரத்தில்கு டைல்கள் பிடித்திருக்க வேண்டியதுடன் தரமான சீமெந்தினால் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- **குளியலறையினுள்ளே முகம் கழுவுகின்ற பேசன் (Wash Basin), கண்ணாடியொன்று, துவாய்கள் மற்றும் ஆடைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான அலுமாரிகள் என்பன இருக்க வேண்டும்.**

- நீரினை நன்றாக உறிஞ்சிக்கொள்ளக் கூடிய துவாய்கள் இருக்க வேண்டியதுடன் அவற்றை அவ்வவ்பொழுது மாற்ற வேண்டும்.

- தேவைகளுக்கு ஏற்ப மின்னமுத்தி மேசைகள் (Iron Board), மின்னமுத்திகளை வழங்க வேண்டும்.

- மின்சார வசதிகளுடன் சகல அறைகளிலும் Plug Points கள் இருக்க வேண்டும்.

## உணவுக்கான அறை

**உணவுக்கான அறையை சிறந்த முறையில் பராமரிக்க வேண்டியதுடன் அதை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் அங்கு இருக்க வேண்டிய மேசை மற்றும் கதிரைகள் சிறந்த வசதியுடன் இருத்தல் வேண்டும்.**

இங்கு சிறந்த தரத்திலான மேசை கரண்டிகள், கோப்பைகள் மற்றும் போதியளவிலான மேசை விரிப்புக்கள் இருத்தல் வேண்டும்.

## சமையல் அறை

- **நன்றாக இடத்துடன் கூடிய, சுத்தமான, சிறந்த விதத்தில் சுவாசக்கக்கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.**

- **சமையல் அறையின் தரையானது தண்ணீரை உறிஞ்சக்கூடிய தன்மையற்ற நன்றாக , இலகுவாக சுத்தப்படுத்தக்கூடிய விதத்தில் இருத்தல் வேண்டும்.**

- சமையல் அறை பிரதேசமானது பூச்சுகள் மற்றும் எலிகள் உள்ளே உலாவாதவாறு இருத்தல் வேண்டும். அத்துடன் ... அமைந்துள்ள அனைத்து பகுதிகளும் நுளம்புகள் வராதவண்ணம் நன்றாக பாதுகாப்பு வலைகள் மூலம் முடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தனியறை அல்லது இரண்டு அறைகள் இருக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொரு அறையிலும் விருந்தினர்களுக்கு உரிய தனியான கழிவறை வசதிகள் இருக்க வேண்டும்.**

- படுக்கையறையில் போதியளவு காற்று வசதிகள் இருக்க வேண்டும். அத்துடன் அங்கு இடவசதிகள் மற்றும் சிறந்த பராமரிப்பு என்பன இருக்க வேண்டும்.

- **தனி படுக்கையறை (Single Bed room) யின் அளவு குறைந்தது 100 சதுர அடிகளுக்கு குறையாதிருக்க வேண்டியதுடன் இருவர் படுக்கையறை (Double Bed room) யின் அளவு குறைந்தது 120 சதுர அடிகளுக்கு குறையாதிருக்க வேண்டும்.**

- **பாவனைக்குட்படுத்தப்படுத்தபடுகின்ற சகல அறைகளுக்கும் பூட்டுகள் இருக்க வேண்டியதுடன் அறைகளது கதவுகளை இரு பக்கங்களிலும் மூடக்கூடியவாறு இருக்க வேண்டும்.**

- சகல அறைகளிலும் ஜன்னல்கள் இருக்க வேண்டும். அத்துடன் அவற்றிற்குப் பொருத்தமான திரைச்சீலைகள் போடப்பட்டிருக்க வேண்டும்.

- **அறைகளில் குளிருட்டிகளில் இருக்க வேண்டும். இல்லையெனில் மின்விசிறிகள் இருக்க வேண்டும். காலநிலைக்கு ஏற்றவாறான வசதிகள் அறைகளில் செய்து தர வேண்டும்.**

- அறையினுள்ளே தொலைபேசி வசதிகள் இருக்க வேண்டும். இல்லையெனில் மணியோசை வசதிகள் செய்து தரவேண்டும். (சுற்றுலா விடுதிகளுக்கு பின்வரும் வசதிகள் நிச்சயமாக இருக்க வேண்டும்)

- **கண்ணாடி மேசையொன்று, அலுமாரியொன்று அல்லது சுவர் அலுமாரியொன்று (ர்யபெநசஎ) இருக்க வேண்டும்.**

- அறைக் கட்டில்களில் பஞ்சிலான தலையணைகள் இருக்க வேண்டியதுடன் கட்டில் மெத்தைகள் இறப்பரினால் இருக்க வேண்டும். சிறுவர்களுக்கான சோபா கட்டில்கள், தட்டு (டீரமெ) கட்டில்கள், மடிக்கக்கூடியவாறான (குரவழடெ) கட்டில்கள் இருக்க வேண்டும். காற்று ஊதி நிரப்பக்கூடிய ( Blow Up) கட்டில்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

- **தனிக் கட்டிலொன்றின் அளவு 1.07m x 2 m ற்கு குறையாதிருக்க வேண்டியதுடன் இருவருக்கான கட்டிலொன்றின் அளவு 1.83 x 2m ற்கு குறையாதிருக்க வேண்டும்.**

- **புதிதாக வருகின்ற ஒவ்வொருவருக்கும் பதிய படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட வேண்டியதுடன் ஒரு விருந்தினரது படுக்கை விரிப்பானது குறைந்தது மூன்று நாட்களுக்கு ஒரு தடவையாவது மாற்றியாக வேண்டும்.**